Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National Tamil Daily தேசிய தினசரி

மலர் 6 மாசி 8 ஆம் நாள் ஷவ்வால் 5 (20-2-64) வியாழக் கிழமை இதழ் 10

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

	வாரப்பதிப்பு உட்பட	வாரப்பதிப்பு மட்டும்
1 வருடம்	48-00	13-00
6 மாதம்	25-00	6-50
3 மாதம்	13-00	3-25

மொழிப்பிரச்னை தீர்க்க

வட்ட மேசை மகாநாடு

மந்திரிசபை முடிவு

கொழும்பு, புதன்

மொழிப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கும் பொருட்டு பார்லிமெண்டிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையும் அரசாங்க கட்சித் தலைவர்களையும் அழைத்து வட்டமேசை மகாநாடொன்றைக் கூட்டுவதென்று மந்திரிசபை முடிவு செய்துள்ளது.

கடந்த வாரத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்களுடனும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பிரதிநிதிகளுடனும் மந்திரிகள் சிலர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாகவே இம் முடிவு இப்பொழுது செய்யப்பட்டுள்ளது. இன்று மந்திரிசபை மொழிப் பிரச்னை பற்றி ஆராந்தது. தமிழ்ப் பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள சில கஷ்டங்கள் குறித்தும் தனிச் சிங்களச் சட்டத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெற்றிகரமாக அமுல் நடத்துவதில் ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைகள் பற்றியும் மந்திரிகள் ஆராய்ந்தனர் என்றும் மொழிப்பிரச்னையைத் தீர்த்து வைக்க வட்ட மேசைமகாநாடொன்றைக் கூட்டுவதென்றயோசனைக்கு மந்திரிகள் பலர் ஆதரவு தெரிவித்திருந்தனரென்றும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

டாக்டர்கள்

தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவது நிறுத்தப்படும்

அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையில் கடமையாற்றும் டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதை ஆகஸ்ட் மாதத்திலிருந்து தடை செய்வதென்று இன்று கூடிய மந்திரிசபை முடிவு செய்துள்ளது.

டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதால் பொதுமக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்களென்றும் இவ்விதம் தனிப்பட்ட முறையில் டாக்டர்கள் தொழில் நடத்துவதைத் தடை செய்ய வேண்டுமென்றும் சுகாதார அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத் சிபார்சு செய்திருந்ததை இன்று மந்திரிசபை ஏற்றுக்கொண்ட பின்னரே இவ்வித முடிவு செய்யப்பட்டது.

8-ம் வகுப்பு வரை

வருடாவருட வகுப்பேற்றம்

கல்வி மந்திரியின் புதிய திட்டம்

கொழும்பு, புதன்

கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல சிபார்சு செய்துள்ள புதிய கல்வித் திட்டத்தின்படி பாடசாலையிலுள்ள ஒவ்வொரு மாணவனும் வருடாவருடம் வகுப்பு உயர்வு பெற்று எட்டு வருடக் கல்வியைப் பெறுவார்கள்.

இத்திட்டத்தின்படி ஒரு மாணவன் 8-ம் வகுப்பை அடையும்போது அம்மாணவனுக்கு 14 வயதாக இருக்கும். இதன்பின் இந்த மாணவர் தொடர்ந்து கல்வி கற்க வேண்டுமா அல்லது பாடசாலையை விட்டு விலகவேண்டுமா என்பது பற்றித் தீர்மானிக்கும்படி பெற்றோர்கள் கோரப்படுவர்.

இந்த 8 வருடக் கல்வி அடிப்படைக் கல்வியாகக் கணிக்கப்படும். தற்போது ஆரம்பக்கல்வி 5-ம் வகுப்புடன் முடிவடைகிறது.

பிரதேச கல்வி டைரக்டரின் விசேஷ அனுமதியுடன் தான் ஒரு மாணவரை 8-ம் வகுப்பில் வைத்திருக்க அனுமதியளிக்கப்படும்.

ஜி. ஸி. ஈ. சாதாரண வகுப்பில் ஒரு மாணவன் தொடர்ந்து இரண்டாவது வருடமும் இருக்க விரும்பினால் முதல் வருடத்தில் நான்கு பாடங்களுக்குக் குறையாமல் விசேஷ சித்திகள் பெற்றிருக்கவேண்டும்.

புதிய திட்டத்தின்படி பாடசாலையிலுள்ள பரீசார்த்தி ஒருவர் ஜி. ஸி ஈ. உயர்தர பரீட்சைக்கு இரண்டாவது தடவை தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

காரில் வந்திறங்கிய பெண்களுக்கு மட்டும் சலுகை!

யாழ். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் நடந்த சம்பவம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் நேற்று மாலை துணி வாங்க மணிக்கணக்காக கியூவில் காத்துநின்ற பெண்களையும் வயோதிபர்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, டக்ஸியில் வந்திறங்கிய நான்கு இளம் பெண்களை அங்கே கடமையாற்றிய இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உள்ளே அழைத்து சென்றதைத் தொடர்ந்து சில நிமிட நேரம் பெரும் சச்சரவு ஏற்பட்டது.

பொறுமையோடு மணிக்கணக்காக கியூ வரிசையில் காத்துநின்ற பெண்களும், ஆண்களும் பொலிஸ்கான்ஸ்டபில்களும் இடித்துக்கொண்டு ஆவேசத்துடன் உள்ளே சென்றனர். இந்த ஜனத்திரளை கட்டுப்படுத்த முடியாத இரு பொலிஸ் கான்ஸ்டபிலும், ஸ்தாபன ஊழியர்களுடன் ஸ்தாபன வாசலிலுள்ள இரும்பு கேற்றை இழுத்து மூடிவிட்டனர்.

இளம் பெண்களை மட்டும் உள்ளே விட்டதையிட்டு கேள்வி எழுப்பியவர்களை ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் பேசியதோடு தாக்கவும் முயற்சித்தார். இச்சம்பவம் பற்றி ஸ்தாபன மனேஜரை நமது நிருபர் கேட்டபோது, தாம் பின்னுக்கு இருந்தபடியால் நடந்ததொன்றும் தமக்குத் தெரியாதென்றும், இனிமேல் இப்படி தவறு நேராமல் எல்லோரும் கியூ வரிசைப்படி செல்ல ஒழுங்கு செய்வதாகவும் கூறினர்.

தமிழ்மொழி சலுகைகள் மசோதாவை அமுல்செய்க

யாழ் கம்யூனிஸ்ட் கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழரசுக் கட்சியினர் தாம் நடத்த இருந்த நேரடி நடவடிக்கையைக் கைவிட்டதன் மூலம் ஏற்பட்ட சுமுகமான சூழ்நிலையில், உத்தியோக மொழி மசோதாவை அமுல் நடத்தும் அதே வேளையில் அரசாங்கம் தமிழ் மொழி விசேஷ சலுகைகள் மசோதாவையும் அத்துடன் அமுல் நடத்தும்படி அரசாங்கத்திடம் கோரும் தீர்மானமொன்றை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணப் பிரதேசக்கிளை கமிட்டி நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாணம் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் சென்ற 15-ம் திகதி நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதேசக் கமிட்டிக் கூட்டத்தில் இதற்கான பிரேரணை கிளைக் காரியதரிசி திரு. ஐ. ஆர். அரியரத்தினத்தால் கொண்டுவரப்பட்டு இது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

300 பேர் சரணடைந்தனர்!

ஆறு முதலாளியர் கைது

மன்னார், புதன்

மன்னார் மாவட்டத்திலுள்ள மீன்பிடி நிலையங்களிலும் தோட்டங்களிலும் வேலைசெய்து வந்த முந்நூறு சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள், மன்னார் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சரணடைந்துள்ளதோடு, தங்களை சட்டவிரோத குடியேற்றகாரர்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

பொலிசாரின் கடும் நடவடிக்கை காரணமாக முதலாளிமார்கள் இவர்களுக்கு உணவும், தங்க இடமுமளிக்க மறுத்ததன் காரணத்தினாலேயே இவர்கள் சரணடைந்தார்கள்.

இது சம்பந்தமாக இதுவரை சட்டவிரோத குடியேற்றகாரருக்கு வேலை கொடுத்ததாக ஆறு தோட்டச் சொந்தர்காரர்களை மன்னார் பொலிஸார் கைதுசெய்து ரிமாண்டில் வைத்துள்ளார்கள்.

'சிங்களத்தில் தேர்ச்சி' சுற்றறிக்கையை வாபஸ்பெறுக

யாழ்ப்பாணம், வியாழன்

பாடசாலை அதிபர்களும், உபஅதிபர்களும், சகல தலைமை ஆசிரியர்களும் அரசகரும மொழியான சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்ற சுற்றறிக்கை இல. 618, பற்றி சமீபத்தில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது இச்சுற்றறிக்கையை தமிழ் மூலம் கல்வி பயிற்றும் பாடசாலைகளிலிருந்து உடனடியாக வாபஸ் செய்துகொள்ள வேண்டுமென வித்தியாதிபதியைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சகல ஆசிரியர்களும் அரசாங்கத்துடனும் ஒருவரோடு ஒருவரும் பாடசாலை சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தத்தம் தாய் மொழியில் செய்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கும் தீர்மானமும் நிறைவேறியது.

ராஜினாமா

ஆக்ரா, பெப். 19

காரைநிதி மந்திரி ராஜினாமா செய்துள்ளார். அவரின் ராஜினாமாவை கானூ அதிபர் நிக்ருமா ஏற்றுக் கொண்டார். காரணம் தெரிவிக்கப்படவில்லை.

தமிழ் நாட்டில் கட்டாயமில்லை

புதுடில்லி, பெப். 19

7 ராஜ்யங்களில் ஹிந்தி கட்டாயமாக்கப்பட்டிருப்பதாயும், தமிழ் நாட்டின் விசேஷ நிலைமையைக் கருதி அங்கு கட்டாய பாடமாக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

'வெளியேறுக'

லண்டன், பெப். 19

ஸான்ஸிபாரிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் 24 மணி நேரத்தில் வெளியேறவேண்டுமென்று ஸான்ஸிபார் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சைப்பிரஸ்

நியூயோர்க், பெப். 19

சைப்பிரஸ்நெருக்கடிகுறித்து மீண்டும் விவாதிக்கும் பொருட்டு ஐக்கியநாடுகள் பொதுச்சபை இன்று கூடியது.

மாவுக்கு அதிக பணம் செலவு

கொழும்பு, புதன்

நாட்டிற்கு போதியளவு மா வாங்குவதற்கு இந்த வருடம் 4,725,000 ரூபா கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது. ஆதிஸ்

மனிவாக்கு

நம்மிடமுள்ள குறைகளற்றங்களை உணராமல் இருப்பதே ஆகப்பெரிய குற்றமாகும்.

— தாமஸ்கார்லைல்

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tam Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 339

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மாசி 8 வீ வ (20-2-64)

தேசிய அரசாங்கம் வேண்டும்

"சரிகிற காலத்தில் சங்கரா" என்று ஒரு வசனமுண்டு. தன் ஆயுள்காலமெல்லாம் வெகுவாக பல பாதகங்களும் செய்துவிட்டு, கடைசி நேரத்தில் ஒருவர் 'கடவுளே' என்று கூறமுயலுவது போல் இருக்கின்றது, இப்போது அரசாங்கம் மொழி விஷயமாக தமிழருக்கு "நியாயம்" வழங்கச் செய்யும் முயற்சியும். கடைசி நேரத்திலாவது இந்த நல்லறிவு ஏற்பட்டது வரவேற்கத்தக்கதுதான். எனினும் இன்றுள்ள அரசாங்கத்தின் பலத்தையும் நாட்டின் பல பிரச்னைகளையும் கவனிக்கும் போது மொழிவிஷயத்தில் மட்டுமன்றி பொருளாதாரம் முதலிய பல்வேறு பிரச்னைகளிலும் எல்லா பெரிய கட்சிகளின் ஒத்துழைப்பும் இன்றியமையாததென்பது புலனாகும்.

மொழிப் பிரச்னையைத் தீர்க்க சர்வகட்சி அடிப்படையில் செய்யப்படும் முயற்சிகளைப்பற்றிய விவரங்கள் தெரியவில்லை. இம்முயற்சி வெற்றிபெற்று இதற்கான முறையில் சட்டத்திலே தக்க திருத்தங்கள் செய்யப்பட்டாலும் இதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய சில தீவிரவகுப்புவாதிகள் காத்திருப்பது பகிரங்க ரகசியம். பிரதேசபைகளால் தமிழருக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்குமென்றும் அவர்கள் விரும்பியபடி செய்வார்களென்றும் ஏற்கெனவே வெளிமடைப் பிரதிநிதி பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார். மொழி விஷயமாகவும் அவர் அபாயச்சங்கு ஊத அதிக நேரமாகாது. சென்ற சுமார் மூன்று வருடங்களில் அரசாங்கக்கட்சியின் பலம் வரவரக் குறைந்து இப்போது பிரதமரும் கவலைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மொழிப் பிரச்னையையோ அல்லது வேறு தேசியப் பிரச்னைகளையோ அரசாங்கக்கட்சி தனிப்பட்ட முறையில் சமாளிக்க முடியுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இப்போது நாட்டுக்குப்பெரியதோர் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. வெளிநாடுகளில் அரிசி வாங்கக்கூட பணமில்லை என்று சொல்லப்படுகின்றது. இது நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் கவலை அளிப்பதாகும். இப்பிரச்னை அரசாங்கக் கட்சிக்கு மட்டும் ஏற்பட்டிருப்பதாகக் கருதி மற்றவர்கள் பேசாமல் இருக்க முடியாது பணப்பிரச்னையைத் தீர்க்க எல்லாக் கட்சியினரின் பூரண ஒத்துழைப்பும் தேவை. பங்கீட்டு அரிசியை ஒன்றைய விலைக்கு விற்க நாட்டின் நிதிநிலைமை இடமளிக்காதென்பது அரசாங்கத்துக்கு மட்டுமன்றி எல்லா முக்கிய கட்சிகளுக்கும் தெரியும். என்றாலும் அரசாங்கக் கட்சி அடுத்த தேர்தலுக்குப் பயந்து எதுவும் செய்யமுடியாமல் தவிக்கின்றது. மற்றக்கட்சிகளும் தூர நின்றுவேடிக்கை பார்க்கின்றன. இதனால் நாட்டின் பொருளாதாரமும் பொதுநன்மையும் மிகமோசமாகி கவலை அளிக்கக்கூடியதாகவுள்ளது.

இந்த அவலநிலை தீர என்ன செய்ய வேண்டும்? கடப்பாரை விழுங்கியவனுக்கு சுக்குக்கஷாயம் கொடுப்பதுபோல் காரியங்கள் செய்ய முடியாது. தீவிரமான முறைகளைக் கையாள வேண்டும். இன்று அரசாங்கம் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. ஒரு சில நியமன வாக்குகளாலேயே இது உயிர் வாழ்கின்றது. இந்நிலையில் மலைபோன்ற தேசியப் பிரச்னைகளை அது தனித்துநின்று தீர்க்க முடியாது. நாட்டிலுள்ள எல்லாக் கட்சி திறமைசாலிகளின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். இதை உணர்ந்து பிரதமர் சிறிமா, பல கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேச வேண்டிய சமயம் வந்துவிட்டது.

இப்போதுள்ள ஒரு கட்சி அரசாங்கத்தைக்கலைத்து பிரதமர் சிறிமாவின் தலைமையில் பல முக்கிய கட்சிகளும் அடங்கிய ஒருதேசிய அரசாங்கத்தை அமைத்தால், இன்று ஏற்பட்டுள்ள தேசியஆபத்தை வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும். தேசபக்தியும் தியாக சக்தியும் இதற்குத் தேவை. இவ்விஷயமாக இனி வீண் தவக்கம் செய்வதற்கில்லை. கட்சி நலனைவிட நாட்டின் நலனே அதிக முக்கியமென்பதை உணர்ந்து பலகட்சிகளும் எவ்வளவுக்கெவ்வளவு இப்போது ஒத்துழைக்க முன்வருகின்றனவோ அதைப் பொறுத்தே நாட்டின் எதிர்காலமுமிருக்கும்.

ஒலகாட்டுக்கு பாராட்டு

கொழும்பு, புதன்

"எமது நாட்டில் சர்வகலாசாலைகள் இருந்த போதிலும் இங்குள்ள சிமிந்தி, சர்க்கரை ஜவுளி ஆலைகளைக் கையாள்வதற்குத் தேவையான தொழில்நுட்பக்காரர்களைச் சிருஷ்டிக்க முடியாமலிருக்கிறோம்" என திரு. பி. டி. எஸ். குலரத்ன 'இலங்கையில் ஒல்காட்' என்னும் தலைப்பில் பேசிய போது குறிப்பிட்டார்.

1818 ம் ஆண்டு கர்னல் ஒல்காட் காலிக்கு விஜயம் செய்தாரென்றும் புத்தமதத்தை அவர் ஆதரித்தார் என்றும் அவர் மனித உரிமைக்காகவும், சமத்துவத்துக்காகவும் போராடினார் என்றும் திரு. குலரத்ன தெரிவித்தார்.

புங்குடுதீவு கிராமசபைத் தேர்தல்

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் மார்ச்மாதம் 5-ம் திகதி தாக்கல் செய்யப்படும். இம்முறைத் தேர்தல் வழமைபோல் இல்லாது கட்சிகள் சார்பிலும் கழகங்களின் சார்பிலும் அபேட்சகர்கள நிறுத்தப்படுவார்களெனத் தெரிய வருகிறது.

பகுத்தறிவுக்கு புறம்பானதை தமிழர் கோரவில்லை

'டைம்ஸ்' பத்திரிகை கருத்து

நாட்டில் இன ஒற்றுமை நிலவவேண்டியதன் அவசியத்தை நாட்டின் அனேகமான அரசியல் கட்சிகள் உணர்ந்து வருவதாகவும் ஆகையால் மொழிப்பிரச்னை சம்பந்தமாக சர்வகட்சி ஒப்பந்தம் ஒன்று ஏற்படுவது கடினமானதாகத் தெரியவில்லை யென்றும் 'டைம்ஸ்' பத்திரிகையின் பெப்ரவரி 18-ந் திகதிய ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சர்வகட்சித்தீர்வு' என்ற தலையங்கத்தின் கீழ் எழுதப்பட்டிருப்பதாவது:-

இவ்வாரம் சமஷ்டிக் கட்சியினர் நடத்தவிருந்த நேரடி நடவடிக்கையை அவர்கள் வாபஸ் பெற்றது குறித்து வரவேற்றதுடன், நியாய புத்திபடைத்த சிங்கள மக்கள் கூட வெறுக்கக் கூடிய வகையில் கடந்த காலங்களில் இனப்பிரச்னையை கிளறிவிட்டுக்கொண்டிருந்த சத்தியாக்கிரகம், பகிஷ்கரிப்பு இயக்கங்களுக்கு மக்கள் முடிவுகட்டிவிட்டனர் என்றும் நம்பிக்கை தெரிவித்தும் நேற்று இப்பத்தியில் தெரிவித்திருந்தோம்.

ஆனால் தமிழர்கள் சகிப்புத்தன்மையுடனும் பொறுமையுடனும் இருந்தால் மட்டும் இப்பிரச்னைக்குத் தீர்வுகண்டுவிட முடியாது எமதுநாடு பலஇன மக்கள் வாழும் நாடாக இருந்த போதிலும் இங்கு வாழும் சிறுபான்மையினர் தாங்களும் இந்நாட்டின் பிரஜைகள் என்று உணரும்படியாக அவர்களுக்கு கிடைக்கவேண்டிய சகல உரிமைகளையும் சட்ட பூர்வமாக அளிக்கவேண்டியது அவசியமாகும். இலங்கையின் சுதந்திரத்துக்கு சகல இன மக்களும் நம்பிக்கையுடனும், ஒற்றுமையுடனும் உழைத்தார்கள் என்பதையும் மறந்துவிடக் கூடது.

சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு மீண்டும் திரைமறைவில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகிறதென்ற செய்தி வரவேற்கத்தக்கதாகும். கடந்த காலங்களிலும் இவ்வித பேச்சுவார்த்தைகள் நடைபெற்றனதான் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் சமஷ்டிக் கட்சியினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்க்கக்கூடிய அறிகுறிகள் காணப்பட்டன. சென்ற வருடம் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவும் தமிழர்களின் மற்றும் பிரதிநிதிகளுடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மாவட்ட சபைகள் உட்பட பல விஷயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனாலும் மொழிப்பிரச்னையைத் தீர்த்து வைக்கவேண்டும் என அரசாங்கம் உணர்ந்திருந்த போதிலும், சிறுபான்மையினருக்கு உரிய உரிமைகளை வழங்கினால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது அரசியல் எதிரிகள் ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என்ற பயத்தினாலேயே, பேச்சுவார்த்தைகள் பல நடைபெற்ற போதிலும் அப்பிரச்னைக்கு நிரந்தரமான, திடமான முடிவு எதுவும் ஏற்படவில்லை. நாட்டின் முக்கிய பிரச்னையான இப்பிரச்னைக்கு முடிவுகாண ஒரேயொரு வழி இப்பிரச்னையை கட்சிபாகுபாட்டிலிருந்தும் புறம்பாக நோக்குவதேயாகும். இதை முன்னரும் பலமுறை இப்பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தோம். நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தி வரும் அரசியல் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு எதையும் சுமுகமாக தீர்க்கும் சுபாவம் ஏற்பட வேண்டியதவசியம்.

இப்பிரச்னை சம்பந்தமாக சர்வகட்சி ஒப்பந்தம் ஒன்று ஏற்படுவது கடினமான ஒன்றாக எமக்குத் தெரியவில்லை. நாட்டின் முன்னேற்றத்துக்கு, எந்த வகையில் நோக்கினாலும் இன ஒற்றுமை அவசியம் என்பதை சகல பிரபல அரசியல் கட்சிகளும் உணர்ந்துள்ளன.

எனவே தலையிடி கொடுக்கும் இப்பிரச்னையைத் தீர்த்து வைப்பதை அவர்கள் வரவேற்பார்கள் என்றே எண்ணுகிறோம். எதற்கும் கூக்குரலிடும் சிறு சிறு கட்சிகளே இது துரோகமானது எனக் கூறலாம். பெரிய அரசியல் கட்சிகளும், ஏன், நாடு முழுவதுமே இப்பிரச்னையை நியாயமாகத் தீர்த்து தூண்டுதல் கொடுக்கும் என்பது எமது நம்பிக்கை. பகுத்தறிவுக்குமாறான எதையும் தமிழர்கள் கேட்கவில்லையே! நாட்டின் உத்தியோக நிர்வாகத்தில் தங்கள் மொழிக்கும் நியாயமான இடமளிக்கும்படியும் தேசிய கல்வி முறையில் தமக்கு உரிய சலுகைகளை அளிக்கும்படியும், அரசாங்க சேவை நியமனம், பதவி உயர்வு ஆகியவற்றில் நியாயம் வழங்குமாறுமே அவர்கள் கேட்கிறார்கள். திடமான கொள்கைகளைக்கடைப்பிடித்து வந்ததின் இன்னல்களை நாடு நீண்ட காலமாக அனுபவித்துவிட்டது. எங்கள் இன சமயங்கள் வேறாக இருந்தாலும், நாங்களும் இந்த நாட்டுப் பிரஜைகள் என்பதனால், நாட்டின் நலன்கருதி இனியாவது இப்பிரச்னையை ராஜதந்திரத்துடன் தீர்த்து வைப்பதில் பெரிய அரசியல் கட்சிகள் பெரும் பொறுப்புடன் நடந்து கொள்ளும் என்றே நம்புகிறோம்.

பாடசாலைகள் கட்டுவதற்கு தாமதம் ஏற்படுவதேன்?

கல்விமந்திரி விளக்கம்

கொழும்பு, புதன்

எம்.பி.க்கள் தங்கள் ஜாபிதாக்களைத் தாமதமாக அனுப்புவது காரணமாகவே புதிய பாடசாலைகளை கட்டும் வேலையும் தாமதமடைகிறது என கல்விமந்திரி திரு. கலுகல்ல கூறினார்.

அலவத்தை எம். பி. திரு. அனில் முனசிங்காவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு அவர் கூறினார். இத்தாமதத்தின் காரணமாகப் பணம் ஒதுக்குவதும் பாதிக்கப்படுகிறது என மந்திரி கூறினார்.

அடிக்கடி எம். பி.க்கள் செய்யும் மாற்றங்களும் சிபார்சுகளும், தாமதத்திற்கு மற்றும் சில காரணங்கள் என மந்திரி கூறினார்.

1961-63-ல் 421 பாடசாலைக் கட்டிடங்கள் கட்டப்பட்டதாயும், இதற்கு ரூபா 1,08,41,374-96 செலவு பிடித்ததாயும் மந்திரி கூறினார். 36 விஞ்ஞான கூடங்கள் ரூபா 11,96,009-27 செலவிலும், மற்றும் 33 ஆசிரியர் விடுதிகள் கட்டப்பட்டதாயும் மந்திரி மேலும் கூறினார்.

கொழும்பு, புதன்

திறைசேரி உதவிக்காரியதரிசி திரு ஸி. பாலசிங்கம் சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியாகவும், சுகாதார அமைச்சின் தற்போதைய நிரந்தரக்காரியதரிசி திரு. வி. எல். வீரசிங்க மராமத்து இலாகாவுக்கு மாற்றப்படுவர் என்றும், மராமத்து இலாகாவின் தற்போதைய நிரந்தரக் காரியதரிசி திரு. ராஜேந்திரா நீண்டகால ரஜாவில் செல்வார் என்றும் தெரிகிறது.

ஐயாறன் எழுதுவது

"தேசிய ஒற்றுமை" என்ற தலைப்பிலே "டெயிலிநியூஸ்" பத்திரிகை எழுதியுள்ள ஒரு தலையங்கத்தைப் படித்தேன். மிக மகிழ்ச்சியாக இருந்தது. இந்தமாதிரி ஒரு ராகத்தை அது இதுவரை பாடவில்லை. மொழிப் பிரச்னையை நியாயமான முறையில் தீர்க்க வேண்டுமென்று இதுவரை அது ஒருவார்த்தையும் கூறியதில்லை.

ஒருதலைப்பட்சமாக பலத்த எதிர்ப்பினிடையே, பீரங்கிக் காவலுடன், பழைய ஏற்பாடுகளைமீறி தனிச்சிங்களச்சட்டம் நிறைவேறியபோதும், "குளு கோஸ்" ஜெயகுரியா உண்ணாவிரதமிருந்தபோதும் அப்பத்திரிகை அதை ஆட்சேபித்து ஒன்றுமே எழுதவில்லை. இதற்கு மாறாக அச்சட்டத்தை நிறைவேற்றுவதில் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் உபதேசம் செய்தது.

* * *

19 வருடங்களுக்கு முன்பாக நாட்டின் முதல் பிரதமர் (பெரிய சேனநாயக்கா) அரசாங்கசபையில் சிங்கள ஆதிக்கத்துக்காக இன்றி இலங்கையர் ஆதிக்கத்துக்காகவே தாம் பாடுபடுவதாகக் கூறியபொன்மொழிகளை அவரது சகாக்களில் பெரும்பாலோரும் அவருக்குப்பின் பதவிக்கு வந்தவர்களும் எதிர்க்கட்சியினரும் "ஐயோ பின்பற்றவில்லையே" என்று அப்பத்திரிகை இப்போது கண்ணீர் வடிக்கின்றது. பலே பலே!

ஆனால் இந்தக் கண்ணீர்த் துளியை தனிச்சிங்களமொழி மசோதா கொண்டுவரப்பட்ட போதே அப்பத்திரிகை சற்றே விடவில்லையே என்பதுதான் என் வருத்தம்.

சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாக இருக்க வேண்டுமென்ற ஒரு மேலான ஏற்பாட்டை சேனநாயக்கா செய்து, அதைப் பத்து ஆண்களுக்குமேல் அமுல் நடத்தினாரல்லவா? அதன்பிறகு களனி மகாநாட்டிலே யு. என். பி. அதை மாற்றித் தீர்மானித்தே, அப்படிச் செய்யாதீர்கள் என்று டெயிலிநியூஸ் ஏதாவது ஒரு வார்த்தை கூறியதா? எனக்கு நினைப்பில்லை.

* * *

அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் வெற்றி பெறுவதே குறிக்கோள். அதற்காகமொழி,மதம் முதலிய வெறிகளையும் கிளப்பத் தயங்கமாட்டார்கள். ஆனால் பொறுப்புள்ள பத்திரிகைகள்தான் இதைப்பற்றி உடனுக்குடன் கண்டித்து, அரசியல்வாதிகளை அதிகவிஷமம் செய்யாதவாறு தடுக்க வேண்டும்.

ஒரு சகவர்த்தமானியான 'டெயிலிநியூஸ்' பத்திகையைப் பற்றி இப்படிக் குறை கூறுவதில் எனக்குச் சற்றும் மகிழ்ச்சியில்லை. ஆனால் இங்கு மிகச் செல்வாக்குடன் விளங்குவதுடன், இலங்கையரனைவரும் பெருமை கொள்ளக்கூடிய விதத்தில் மூன்று மொழிகளிலும் பத்திரிகைகளை வெளியிடும் அந்த ஸ்தாபனம் தன் தேசியக் கடமையை விருப்பு வெறுப்பின்றி செய்யத் தவறிவிட்டதே என்ற உணர்ச்சியாலும் அப்பத்திரிகையை மிக முக்கியமானதாகக் கருதுவதாலுமே இவ்வளவுதூரம் இங்குஎழுதவேண்டியதாயிற்று.

இப்போதாவது அப்பத்திரிகை தமிழருக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று துணிந்து எழுத முன்வந்ததற்காக அதைப் பாராட்டுகின்றேன். இத்துணிச்சல் நீடூழி வாழ்க!

* * *

ஆனால் ஒருசின்னத் தவறு. மொழிப் பிரச்னையை தேசிய முறையில் தீர்க்க இப்போது நடக்கும் முயற்சியைப்பற்றி

(5-ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர்

"பாகிஸ்தானுக்கு மாபெரும் ராஜதந்திரத் தோல்வி"

பாதுகாப்புசபை விவாதம்குறித்து இந்திய பிரதிநிதி திரு. சக்ளா மேற்கு நாடுகள் போக்குக்கு கண்டனம்

பம்பாய், பெப். 19

பாதுகாப்புசபையில் பாகிஸ்தானுக்கு மாபெரும் ராஜதந்திரத் தோல்வி ஏற்பட்டதாக நியுயோர்க்கிலிருந்து நேற்று பம்பாய் திரும்பிய இந்தியக் கப்பல்மந்திரி திரு. சக்ளா கூறினர்.

வழியில் அவர் லண்டனில் நிருபர்களிடம் பேசியபோது இந்தியா காஷ்மீரில் சர்வஜன வாக்குரிமையை ஏற்காது என்னர். இதற்கு வேறுவித பரிகாரமே சாத்தியம் என்றும்அவர் கூறினர்.

மேற்கு நாடுகள் சபையில் நடந்து கொண்டமுறைபற்றி கண்டனம் தெரிவித்தார்.வகுப்புக் கலவர விஷயத்தில்கூட இந்தியாவையும் பாகிஸ்தானையும் மேற்குநாடுகள் சமநிலையில் வைத்தது தவறு எனவும் திரு. சக்ளா கூறினர்.

காஷ்மீர் விவாதம் இருமுக்கிய விஷயங்களை வெளிப்படுத்தியிருக்கிறதென புதுடில்லியில் வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினர்.

பாதுகாப்புசபையில் விவாதிக்கத்தக்க அளவு நெருக்கடி அங்கில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருப்பதாயும் வகுப்பு சௌஜன்யத்தை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை அது வெளிப்படுத்தியிருப்பதாயும் அவர் கூறினர்.

ரஷ்யப் பிரதிநிதி இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்தது சரியானது என்றும் அவர் மேலும் கூறினர்.

ஜம்முவில் இன்று நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டமும் ஹர்த்தாலும் ஒத்திவைக்கப்பட்டன.

காணமற்போன படைவிமானம் இன்னும் தேடப்படுகிறது

புதுடில்லி, பெப். 19

காணமற்போன இந்திய படை விமானத்தைத் தேடும் முயற்சி தொடர்ந்து நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை முதல் இந்த விமானம் காணப்படவில்லை என்றும், இதுவரை தேடும் முயற்சிகள் பலனளிக்கவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

உயர்தர அதிகாரிகள் சென்ற இந்த விமானம் காணமற்போனது குறித்து நேற்று பார்லிமெண்டின் இரு சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டது. நிலைமையை அப்போதைக்கப்போது சபைக்குத் தெரிவிக்குமாறு சபாநாயகர் பாதுகாப்பு மந்திரியைக் கேட்டுக்கொண்டார். இந்த விமானத்தில் ஒரு மேஜர் ஜெனரல். ஒரு பிரிகேடியர், ஒரு மேஜர், ஒரு காப்டன், ஒரு செகண்ட் லெப்டினண்ட், ஒரு பயலட் ஆபீசர், இரு சார்ஜண்டுகள் உட்படப் பலர் இருந்தனர்.

தென் துருவத்தில் புதிய மலைத்தொடர் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், பெப். 19

அன்டார்ட்டிக்கா என்று கூறப்படும் தென் துருவக் கண்டத்திலுள்ள குவீன்மாடுலாந்து என்ற பிரதேசத்தில் யு. எஸ். கடற்படையைச் சேர்ந்த விமானிகள் புதிய மலைத் தொடர்ச்சி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இக்கண்டுபிடிப்பைப் புதன்கிழமையன்று கடற்படை இலாகாக் காரியதரிசி பால் எச் நிட்ஸ் அறிவித்தார். இந்த மலைகள் 4,000 அடி முதல் 6,000 அடிவரை இருக்கின்றனவென்றும் மேற்கே 80, 100 மைல்களுக்கப்பால் இருக்கும் ஷாக்கில்ட்டன் மலைத்தொடர்ச்சியின் தொடர்தான் இந்த மலைகள் என்றும் அவர் கூறினர். குவீன் மாடுலாந்து, ஆராய்ந்து அறியப்படாத பிரதேசமாகும்.

உலகின் தென்கோடியில் இருப்பது இந்தக் கண்டம். இப்பொழுது இக்கண்டம் பற்றி வரையப்பட்டுள்ள படங்களில், விடப்பட்டுள்ள இடங்களை நிறைவு செய்வதற்கு இக்கண்டுபிடிப்பு உதவியாகவிருக்கும் என்றும் அவர் கூறினர்.

இந்த மலைத்தொடர்ச்சியின் மிக உயரமான மலைக்கு மேலாகப் பறக்கையில் கடற்படை விமானம் ஒன்று அமெரிக்கக் கொடி ஒன்றைக் கீழேபோட்டது. உருக்குக் கம்பம் ஒன்றில் கட்டப்பட்டிருந்தது இக்கொடி. இக்கம்பமும் பனிவான நிலைச்சட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. எனவே மலை உச்சியைத் தட்டியதும் கம்பம் செங்குத்தாக நின்று பறக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. 'இதைக் கண்டு வாசிப்பவர் யாராயினும் அவருக்கு வாழ்த்துக்கள்' என்ற செய்தியும் கம்பத்தில் எழுதப்பட்டிருந்தது. அச்செய்தியில் மலை கண்டுபிடிப்புப் பற்றிய தகவலும் இருந்தது.

"பிரிவினை பரிகாரமல்ல"

லண்டன், பெப். 19

சைப்பிரஸைப் பிரிவினை செய்யும் திட்டமெதுவும் தம்மிடம் இல்லையென்றும் இது மோசமான பரிகாரம் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. அலெக்டக்ளஸ் ஹியூம் ஒருடெலிவிஷன் போட்டியில் கூறினர்.

சைப்பிரஸின் தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்திற் குட்டிபடவகையில் ஒரு பரிகாரம் காண்பதற்கு சாத்தியமான சகல முதற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. ஹியூம் அறிவித்தார்.

பிரிட்டனுக்கு யு. எஸ். உதவி நிறுத்தம்

வாஷிங்டன், பெப். 19

பிரிட்டன், பிரான்ஸ், யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளுக்கு அளிக்கப்படும் சிறிய ராணுவ உதவிகளை அமெரிக்கா நிறுத்திவிட்டதாக அறிவிக்கப்பட்டது. கியூபாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு உதவியை நிறுத்துவதென்ற விதிகளின் கீழேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

1965 க்கு முன் வாபஸ்

வாஷிங்டன், பெப். 19

1965-ம் ஆண்டு இறுதிக்குள் தென வியட்னமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களை வாபஸ் செய்ய முடியும் எனத் தாம் நம்புவதாக பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா அறிவித்தார்.

ராதாகிருஷ்ணன் கடமை ஏற்பார்

புதுடில்லி, பெப். 19

கண் ஆப்ரேஷன் காரணமாகத் தற்காலிகமாக ஓய்வு பெற்றிருந்த ஜனதிபதி ராதாகிருஷ்ணன் வருகிற 22-ம் திகதி சனிக்கிழமை மீண்டும் தம் அலுவல்களைக் கவனிக்க ஆரம்பிப்பார் என அறிவிக்கப்பட்டது.

ஷில்லாங்கில் அமைதி

ஷில்லாங், பெப். 19

ஷில்லாங்கில் நேற்று ஏற்பட்ட ஒரு சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதென்றும், சேதம் எதுவுமில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. வேறு எவ்விதச் சம்பவங்களும் நடைபெறவில்லை இப்போது நகர் அமைதியாக இருக்கிறது.

தீக்குப் பலியான 5 பெண்கள்

கராச்சி, பெப். 19

சிந்து மாகாணத்திலுள்ள ஹைதராபாத் ஜில்லாவில் பீர்ளுத் என்ற கிராமத்தில் ரம்மூன் தினத்தன்று ஒரு குடிசை தீப்பிடித்ததால் ஒரு விவசாயின் 5 புதல்விகள் மரணமடைந்தனர்.

"இந்திய எல்லை தகராறு தீரும்" சூ கூட்டறிக்கை

கராச்சி, பெப். 19

சீனப் பிரதமர் சூ-என்-லாய் நேற்று தமது வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யியுடனும் மற்றும் 47 அதிகாரிகளுடனும் கராச்சி வந்து சேர்ந்தார்.

பர்மாவிலிருந்து அவர் புறப்படுமுன் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் சீன-இந்திய எல்லையில் நெருக்கடி நிலை தணிந்திருப்பது குறித்து இரு நாடுகளும் மகிழ்ச்சியடைவதாயும், பிரச்னையில் இறுதித் தீர்வுக்கு வழி பிறக்கும் என நம்புவதாயும் கூறப்பட்டுள்ளது.

புரட்சி நாடு கெபான்

பாரிஸ், பெப். 19

கெபானில் நடைபெற்ற இராணுவப் புரட்சி இருலெப்டினண்டுகளால் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. அரசாங்க மந்திரிகளும், அங்கத்தினர்களும் சிறையில் வைக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது. நிர்வாகத்தை மேற்கொள்ள புரட்சி சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட ஜனதிபதி பின்பு விடுதலை செய்யப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. கெபானில் அடுத்த வாரம் தேர்தல்கள் நடைபெறவிருந்தன என்றும், தேர்தலில் கொள்ளை நடப்பதைத் தடுக்கும் பொருட்டே புரட்சி ஏற்பட்டதாயும் புரட்சிக்காரர்கள் அறிவித்தனர்.

"வெறுங்கையுடன் நான் திரும்பவில்லை"

பாகிஸ்தான்வெளிநாட்டுமந்திரி அறிவிப்பு

நியுயோர்க், பெப். 19

'காஷ்மீர் சம்பந்தமாக பாதுகாப்பு சபை அங்கத்தினர்களால் இரகசியமாக விவாதிக்கப்பட்ட யோசனையை பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் காஷ்மீர் மக்களின் விருப்பம் குறித்து அது தெளிவில்லாமல் இருக்கிறது" என பாக். வெளிநாட்டு மந்திரி பூட்டோ நிருபர்களிடம் கூறினர்.

இரு நாடுகளும் வெளி மத்தியஸ்தர் உதவியுடன் (தலைமைக் காரியதரிசி யுதாண்ட்) பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்பதே இந்த இரகசியத் திட்டம் என்றும் பூட்டோ கூறினர்.

காஷ்மீர் சம்பந்தமாக பாதுகாப்புச் சபை விவரம் இன்னும் முடியவில்லை என்றும், அது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் மேலும் கூறினர்.

"பிரச்னைக்குப் பரிகாரம் காண மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறாதது துரதிருஷ்டமே. இதனால் முயற்சி முற்றுப் பெற்று விட்டது" என அர்த்தமல்ல என்றும் அவர் கூறினர்.

தமது அரசாங்கத்துடன் ஆலோசிக்க தமக்குச் சில தினங்கள் அவகாசம் தேவையென்றும் கூறிய திரு. பூட்டோ, விவாதத்தில் பாகிஸ்தான் வெறுங்கையுடன் திரும்புகிறது என திரு. சக்ளா கூறியதை நிராகரித்தார். "வெற்றி என்ற மாயையில் திரும்பிச் செல்வதை விட வெறுங்கையுடன் திரும்புவதாக நான் நினைக்கவில்லை. ஏனெனில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன; சில யோசனைகளும் தெரிவிக்கப்பட்டன" என்றும் பூட்டோ கூறினர்.

"காஷ்மீர் சம்பந்தமாக ஒரு கௌரவமான உடன்பாடு காண்பதையே பாகிஸ்தான் விரும்புகிறது. இப்பிரச்னை துரிதமாகத் தீர்க்கப்படுவதின் மூலம் இந்தியாவுடன் சமாதானமாக வாழவே பாகிஸ்தான் மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் பாதுகாப்புச்சபை விவாதம் ஆரம்பமானது முதல் காஷ்மீரில் இந்திய ராணுவம் குவிக்கப்பட்டு வருகிறது" என்றும் பூட்டோ கூறினர்.

சைப்ரஸ்

காமன்வெல்த், நடுநிலை நாடுகளின் சமாதானப் படை, யுதாண்ட் திட்டத்திற்கு முட்டுக்கட்டை?

நியுயோர்க், பெப். 19

சைப்ரஸ் சம்பந்தமான பாதுகாப்பு சபையின் கூட்டம் நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது.

சைப்ரஸில் நடுநிலைமைநாடுகளையும், காமன்வெல்த் நாடுகளையும் சேர்ந்த ஒரு சமாதானப்படையை நிறுவ வேண்டும் என்ற தலைமைக்காரிய தரிசி யுதாண்டின் திட்டத்திற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக அவர் துருக்கி, சைப்ரஸ் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

சைப்ரஸில் ரத்தக்களரியை நிறுத்துமாறு அதிபர் மக்காரியோஸ் மீண்டும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சைப்ரஸ் சம்பந்தமாக பாதுகாப்பு சபை என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது என்பதைக் கவனித்த பின்பு மேல்நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என துருக்கிப் பிரதமர் திரு. இஸ்மத் இனோனு கூறினர்.

சைபரஸ் விவாதத்தில் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. பட்லர் நேரடியாகப் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என தொழிற்கட்சி அங்கத்தினர் ஒருவரின் யோசனையை அவர் நிராகரித்தார். பாதுகாப்பு சபையில் உள்ள பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. பெட்ரிக்ஹனின் திறமையில் தமக்கு நம்பிக்கை உண்டு என்று அவர் கூறினர்.

அமெரிக்க உதவி குறையும்

வாஷிங்டன், பெப். 19

ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கான அமெரிக்க உதவி இவ்வாண்டு குறைக்கப்படும் என சர்வதேச அபிவிருத்தி ஏஜென்ஸி அறிவித்திருக்கிறது.

ஆனால் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான உதவி அப்படியே இருக்கும் எனத் தெரிகிறது.

சூ-என்-லாய்

இந்தியா மீது 1000 மைல் பறப்பார்

கராச்சி, பெப். 19

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் சீனப்பிரதமர் சூ-என்-லாய், வருகிற திங்கட்கிழமை லாகூரிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் தலைநகர் டாக்காவுக்குப் பறந்து செல்வார். அவரது விமானம் இந்தியாவின் குறுக்கே 1000 மைல்களைக் கடந்து செல்லும்.

மல்வத்தை தேரோவை டட்லி சந்தித்தார்

கொழும்பு, பு

எதிர்க்கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கா மல்வத்தை பீடாதிபதியை சி முன்தினம் சந்தித்தார். கந் சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்காவின் சினேகிதரான வண அமுனுகம விப் பாசி தேரோ இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டது தனக்கு மகிழ்ச்சியளிப்பதாக உள்ள தென திரு. டட்லி தெரிவித்தார்.

திரு. டட்லி சேனநாயக்கா சமயத்திலும், நாட்டிலும் அதிக அக்கறை எடுக்கவேண்டும் என்றும் தான் எந்த அரசாங்கம் பதவியிலிருந்தாலும் அதற்கு ஆலோசனை கூறுவார் எனவும், தவறு விடும்போது சுட்டிக்காட்டி கண்டிக்கத் தவறமாட்டார் எனவும் தெரிவித்தார்.

கோப்பாய் கி. ச. தேர்தல்

கோப்பாய், புதன்

கோப்பாய் கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் இம் மாதம் 29-ந் தேதி தாக்கல் செய்யப்படுமென அறிவிக்கப்படுகிறது.

"நீதிநேர்மையானவர்களுக்கே பட்டங்கள் கிடைக்கின்றன"

பாராட்டு வைபவத்தில் நீதிபதி

சாவகச்சேரி, செவ்வாய்

"சரித்திர சம்பந்தமாக நாம் ஆராய்ந்து பார்க்கும்போது கண்ணியமான, நீதி நேர்மையானவர்களுக்கே பட்டங்கள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. ஒரே நேரத்தில் இரு பட்டங்கள் திரு. சிவகுருவுக்குக் கிடைத்திருக்கின்றன. ஒன்று சாவகச்சேரி நகரசபை தலைவராய் இருக்கும்வரைரிம் நிலைத்திருக்கும் பட்டம். மற்றது அவர் ஆயுள் உள்ளளவும் நிலைத்திருக்கும் பட்டம். அப்பட்டம் உத்தியோகப் பற்றற்ற சமாதான நீதிபதியாகும்."

இவ்வாறு மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விழாவொன்றில் பிரதம விருந்தினராய்க் கலந்து உரையாற்றும்போது கூறினர். வழக்கறிஞர் ஆர். டி. சிவகுரு உத்தியோகப் பற்றற்ற சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதைக் கௌரவிக்குமுகமாக இந்துக்கல்லூரித் தலைவர் திரு. ஏ. கே. கந்தையா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"சென்ற காலங்களில் படிப்பு உத்தியோகம் பார்ப்பதற்காக இருந்துவந்தது. ஆனால் தற்காலம் தமிழர் அறிவுக்காகவும் கைத்தொழில், கமத்தொழில் செய்வதற்காகவும் இருக்கிறது. இது ஓரளவில் நன்மையென்றே கூறவேண்டும். பொருளாதார விருத்திக்கும் இடமேற்படும். மொழி, இன, மத வேறுபாட்டை மறந்து தமிழினத்தின் மறுமலர்ச்சிக்கு ஸ்தலஸ்தாபனங்கள் பணியாற்றிவருமேயானால் தமிழினத்தில் இலட்சியம் நாளடைவில் கிட்டியேதீரும்."

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூறியதாவது:-

கிராமசபை, பட்டினசபை, நகரசபை, மாநகரசபை ஆகியவைகளில் அங்கத்தவர்களாகி கடமையாற்ற நல்லவர்கள் முன்வருவதில்லை. தோல்வியையோ, பழிச்சொற்களையோ எதிர்பாராது நீதி நேர்மையுடன் பணியாற்ற நல்லவர்கள் முன்னின்று உழைத்தால் நமது நகரமும் நாடும் முன்னேற்றமடையும்.

சுதந்திரமாக நாம் வாழ வேண்டுமானால் தன்மானத்துடன் வாழ வேண்டும். சுதந்திரத்தை நாம் இழந்து வாழக் கூடாது. நமது சுதந்திரத்தை பெற ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்."

திரு. எஸ். கே. திரவியநாயகம், திரு. கே. கதிர்காமசேகரம் சாவகச்சேரி கிராமசபைத் தலைவர் திரு வி. சுப்பையா, வித்துவான் திரு. எம். சபாரத்தினம், திரு. வி. வி. கந்தையா, திரு. வி. விநாயகமூர்த்தி ஆகியவர்கள் திரு. சிவகுருவின் குணதிசயங்களைப் பாராட்டி உரையாற்றினர்.

திரு. ஆர். டி. சிவகுரு: தனக்கும் பாரியாருக்கும் அளித்த உபசாரத்துக்கு நன்றி பாராட்டி; தனக்கிட்டபணியை பாராமல் எந்த நேரத்திலும் செய்வதாக உறுதி கூறினர்.

கிராமசபை இடைத் தேர்தல்

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்திற்கான இடைத் தேர்தல் இம்மாதம் 29-ம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலின் வாக்களிப்பு ஸ்ரீ பராசக்தி வித்தியாசாலையில் பகல் 10 மணி தொடக்கம் மாலை 2 மணிவரையும் நடைபெறும்.

அதிகாரிகள் மீது மந்திரி கண்டனம்

கொழும்பு, புதன்

கல்லோயா அபிவிருத்திச் சபை அதிகாரிகளின் கவலையீனத்தையும், பொறுப்புணர்ச்சி இல்லாத தன்மையையும் காணி மந்திரி திரு. சி. பி. டி. சில்வா கண்டித்துள்ளார்.

அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கும் நமல் ஓயா குடியேற்றத் திட்டத்துக்கு மந்திரி அண்மையில் விஜயம் செய்திருந்தார். அப்போது அங்குள்ள குடியேற்றவாசிகள் கல்லோயா அபிவிருத்திச் சபை அதிகாரிகள் மீது பல குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தனர். அருவி வெட்டுக்குப் பின்னர் தங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்றும் இதனால் பலர் நிலங்களை விட்டு விட்டு சென்றதாகவும் மந்திரியிடம் தெரிவிக்கப்பட்டது.

குடியேற்றத் திட்டத்தை பார்வையிட்ட மந்திரி கல்லோயா அபிவிருத்திச்சபை உத்தியோகஸ்தர்களுக்கு சகல வசதிகள் இருப்பதாகவும் மக்களின் தேவைகளைக் கவனிக்காமல் இருக்கும் இவர்கள் வேலையை விட்டுச்செல்ல வேண்டும் எனவும் மந்திரிதெரிவித்தார். தான் கல்லோயா அபிவிருத்திச்சபையில் வேலை செய்யும் அதிகாரியாக இருந்தால் இந்த உத்தியோகஸ்தர்களைஎப்பொழுதோ வேலையிலிருந்து நீக்கியிருப்பார் எனவும் மந்திரி தெரிவித்தார்.

வழக்கறிஞர்கள் அஞ்சலி

ஊர்காவற்றுறை, புதன்

பிரபல வழக்கறிஞரான திரு. சாம் சபாபதி மறைவு குறித்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் அஞ்சலிசெலுத்தினர். நீதிபதி திரு. அரசுவால்டன் கறுத்த அங்கி அணிந்து கோர்ட்டிற்கு வந்திருந்தார். வழக்கறிஞர்கள் சார்பில் புரக்டர் திரு. சுவாம்பின்னை பேசியதாவது:-

"திரு. சாம் சபாபதி நேர்மையுடன் சாமர்த்தியமும் வாய்ந்தவர். பொதுநலத் தொண்டிலும் ஆர்வம்மிக்க இவர் யாழ்ப்பாணத்தின் மேயராகவும் கடமை புரிந்தார். மேயராகக் கடமையாற்றிய காலத்தில் பொது மக்களின் நன்மதிப்புக்கும், அன்புக்கும் பாத்திரமானார். அவரது நேர்மையான பணியே இதற்குக் காரணமாகும். அவரது மறைவு எமக்குப் பெரும் நஷ்டமாகும்.

நீதிபதி திரு. அரசுவால்டன் நன்றிதெரிவித்துப் பேசுகையில், "திரு. சாம் சபாபதி 35 வருடகாலம் புரக்டராகத் தொழில் புரிந்தபோது சில வருடகாலம் அவருடன் வழக்குப் பேசிய சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது. நேர்மையையே தன் வாழ்வில் இலட்சியமாகக்கொண்ட இவரின் மறைவு பெரும் இழப்பு" எனக் குறிப்பிட்டார்.

அம்பாரைப்பகுதியில் மீண்டும் மழை

அக்கரைப்பற்று, புதன்

அம்பாரை மாவட்டத்தில் நேற்று மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. பெய்து கொண்டிருக்கும் மழையினால் அறுவடைசெய்யவேண்டிய நெல் வயல்கள் எல்லாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

260 கன அடி தண்ணீர் கொள்ளக்கூடிய 'சௌநாயகா சமுத்திரம் நிரம்பிய நிலையிலிருக்கிறது. கடந்த வாரத்தில் இது நிரம்பி வழிந்தோடியது தெரிந்ததே.

ஆசிரியருக்குக் கடிதம்

ஆயச்சேவை

நயினாதீவுக்குச் செல்லும் இந்து, பௌத்த யாத்திரீகர்கள், பிரயாணிகள் ஆகியோர் இறுபிட்டிக்கரையிலுள்ள ஆயசேவையாளரிடம் ஐந்துசதம் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் அந்த ஐந்து சதத்துடனேயே பிரயாணம் செய்ய முடியவில்லை. மேலதிகமாக பணம் கொடுக்க வேண்டியிருந்தும் உரியநேரத்தில் போய்ச் சேர்வதும் கஷ்டமாக உள்ளது. முக்கியமான அலுவல்களை முன்னிட்டுச் செல்லும் பிரயாணிகளும் அக்குறிக்கப்பட்ட மோட்டார் வள்ளத்துக்காகக் காத்துக் கொண்டு நிற்க வேண்டியுள்ளது.

நயினாதீவுக்குச் செல்லும் பிரயாணிகள் பஸ்ஸுக்கு ஒரு ரூபாய் கொடுத்து மோட்டார் வள்ளத்துக்கு 50சதம் கொடுத்து மேலும் 5சதம் ஆயத்துக்கு என்று கொடுக்க வேண்டியுள்ளது. பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள தீவுப் பகுதி மக்களின் ஜீவாதாரப் பிரச்னையையே இது கிளறி விடுகிறது.

எனவே ஆயச்சேவையில் நடக்கும் இச்சீர்கேடுகளுக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும்படி மேலதிகாரிகளை கேட்டுக் கொள்கிறோம்.

க. கனகராசா

யாழ்ப்பாணம்.

•

பொறுத்திருக்கவும்

இலங்கைத் தமிழரசுக்கட்சிக் கொழும்புக்கிளைச் செயலாளர் திரு. சந்திரகாசன் விடுத்த அறிக்கை கண்டு மிகவும் மனவேதனையடைந்தோம்.

திரு. சந்திரகாசன் வெளியிட்ட அறிக்கை அவசரமும் ஆவேசமும் நிறைந்ததாகவே காணப்படுகின்றதே யொழிய கட்சியின் ஸ்தாபகத்தலைவர் திரு. செல்வநாயகம் சத்தியாக்கிரக மறிபல்இயக்கத்தை ஏன் ஒத்திவைத்தாரென்பதை அவரின் மகனான திரு. சந்திரகாசன் விளங்கிக் கொள்ளவில்லையென்றே தோன்றுகிறது. தமிழரசுக்கட்சித்தலைவர்கள் என்றாவது தமிழ்பேசும் மக்களை ஏமாற்றவில்லை. ஏமாற்றியிருந்தால் கடந்த தைமாதம் 1-ம் திகதி நடைபெற்ற சட்ட எரிப்பு இயக்கத்தில் அத்தனை பெருந்தொகையான பெருமக்கள் கலந்திருக்க மாட்டார்கள். ஆகவே அறிக்கை விடுவதைக் கைவிட்டு ஆக்கத்திலிறங்கும்படியும் கட்சியின் தலைமைப் பீடம் ஆணையிடும்வரை பொறுத்திருக்கும்படியும் அவரையும் கொழும்புக் கிளையையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வெ. கணபதிப்பிள்ளை

காரியதரிசி, ஆவரங்கால்

தமிழரசுக்கட்சிக்கிளை.

வினோபா பெயரில் பலநோக்க சங்கம்

சாவகச்சேரி, புதன்

"கச்சாய் கிராமத்தை குறிப்பாகக் கச்சாய் தெற்குப் பகுதியைப் புனித பகுதியாக்க வேண்டும். மதுபானம் உபயோகிப்பதை நிறுத்தவேண்டும். இலங்கையில் முதன் முதல் வினோபாவின் பெயரில் 1957-ம் ஆண்டு கச்சாய் கலைவாணர் மன்றத்தினரால் ஓர் நூலகம் திறக்கப்பட்டது. இப்போது வினோபா பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது."

இவ்வாறு கச்சாய் கலைவாணர் மன்றத் தலைவர் திரு. ஆ. தனபாலசிங்கம் வினோபா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர். அடுத்தமாதம் 15-ந் திகதி வினோபா பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் திறப்பு விழாவை கொண்டாடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வேலை நேரங்களிலே சிங்கள பயிற்சி

உத்தியோக மொழி இலாகாவின் புதிய திட்டம்

கொழும்பு, புதன்

சிங்களத்தில் போதிய தேர்ச்சியடையாத அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம் பயிற்றுவிப்பதற்கு உத்தியோகமொழி இலாகா புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி ஊழியர்களுக்கு அவர்கள் நாளாந்த வேலையின்போதே அவ் வேலை சம்பந்தமான சிங்களப்பயிற்சி அளிக்கப்படும். அத்துடன் வாரத்துக்கு ஒருமுறை ஒன்றரை மணித்தியால சிங்களப் பயிற்சி வகுப்பும் நடத்தப்படும். இவ்விதம் ஆறுமாத காலத்தில் 108 மணித்தியாலங்கள் சிங்கள பயிற்சி வகுப்பு நடத்தப்படும்.

கந்தோர் நேரங்களில் ஊழியர்களை சிங்கள பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள அனுமதிக்கவேண்டும் என நிதி அமைச்சு இலாகா தலைவர்களுக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

வரிப்பணம் கட்டாத குடியேற்றவாசிகள்

இராமநாதபுரம், புதன்

கிளிநொச்சியை சேர்ந்த இராமநாதபுரம் குடியேற்றவாசிகளில் ஐந்து வருடகாலமாக வரிப்பணம் கட்டாத அநேகரை இராமநாதபுரம் குடியேற்றப்பகுதி அதிபர் கந்தோரில் காணி அபிவிருத்தி அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் விசாரணைசெய்தார்.

தங்களின் நெற்காணிகள் விளைவு இல்லையென்றும் அரசாங்கத்தால் வழங்கப்படும் வீடுகளுக்குரிய ஓடுகள் தரவில்லையென்றும் போக்குவரத்து கஷ்டங்களும் இன்னும் அனேக கஷ்டங்களும் அனுபவிப்பதாகவும், இக் குறைகளை நிறைவேற்றினால் தான் வரிப்பணம் கட்டமுடியும் என்றும் விசாரணையின்போது குடியேற்றவாசிகள் தெரிவித்தனர்.

குறைந்தது இரண்டு வருடப் பணமாவது கட்டினால் ஓடுகள் வழங்கப்படுமென்றும் இரண்டு வருடம் வரிப்பணம் 100 ரூபாயும், அதற்குரிய குற்றப்பணம் 10 ரூபாயும் கட்ட வேண்டுமென்றும் கட்டத் தவறின் காணிகள் ரத்துசெய்யப்படுமென்றும் திரு. பஞ்சலிங்கம் தெரிவித்தார். பணம் கட்டாத தேனீர் கடைக்காரரின் கடைகள் சித்திரை மாதம் ஏலத்தில் விடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதப்படுத்தப்பட்ட மரக்கறிவகைகள்

கொழும்பு, புதன்

மரக்கறி வகைகளை பதப்படுத்தி 'பொலிதீன்' பைகளில் அடைத்து விற்பனை செய்யப்படவிருக்கின்றது. நுவரேலியாவில் இதற்கான தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அடுத்த மாத ஆரம்பத்தில் வேலைகள் ஆரம்பமாகியதும் இத்தொழிற்சாலையில் நாளாந்தம் 10 தொன் மரக்கறி வகைகள் பதப்படுத்தப்படும் திட்டமிட்டபடி நாளொன்றுக்கு 20 தொன் மரக்கறி வகைகள் சகல ஆரம்ப வேலைகளும் பூர்த்தியானதும் பதப்படுத்தப்படும்.

ஆரம்பத்தில் பீட்ரூட், கரட், கோவா ஆகிய மூன்று மரக்கறி வகைகளும் பதப்படுத்தப்பட்டு நுவரேலியா டிஸ்திறிக்கில் விற்பனை செய்யப்படும்.

தனியார்துறை முயற்சியான இவ் வேலைக்கு நுவரேலியா பகுதியிலுள்ள கூட்டுறவு சங்கங்கள் துணைபுரிய முன்வந்துள்ளன. மரக்கறிவகை உற்பத்தி செய்யும் விவசாயிகளும், பொதுமக்களும் இதனால் பெரும்பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸ் தாக்குதலை விசாரிக்க கோரிக்கை

எல்பிட்டிய, புதன்

எல்பிட்டிய வன இலாகாவைச் சேர்ந்த டி. ஜி. சிறிசேன என்பவரை பொலிஸ் அதிகாரிகள் சிலர் தாக்கியது குறித்து உடனடியாக பாரபட்சமற்ற விசாரணை நடத்துமாறு எல்பிட்டிய பட்டின சபை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரை எவ்வித விசாரணையும் நடைபெறவில்லை.

மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றம் புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், புதன்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக் கிணங்க நாமனைவரும் எமக்கிடையே சிற்சில சமயங்களில் ஏற்படும் சிக்கல்களை மறந்து பொது நோக்கிற்காக உழைப்போமேயானால் இன்னும் இரு வருடங்களில் எவ்வளவோ முன்னேற்றமான கலைவளர்ச்சிகளை செய்யமுடியும்.

மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்ற வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஆசிரியர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை மேற்கண்டவாறு கூறினர்.

அங்கத்தவர்களின் கருத்தரங்கும், கலந்துரையாடல் நிகழ்ச்சியும் இக்கூட்டத்தில் இடம்பெற்றன.

மன்றத் தலைவர் திரு. து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர் சிவஸ்ரீ க. து. ஷண்முகநாதக்குருக்கள், உபதலைவர்: சிவஸ்ரீ தி. கு. நகுலேஸ்வரக்குருக்கள், காரியதரிசி: மு. சிவபாலன், தனாதிகாரி: வே. குலசிங்கம்.

இந்துசமயப் பிரிவு அதிபர்- சிவஸ்ரீ தி. சபாரத்தினக்குருக்கள். நிர்வாக உறுப்பினர்கள்: ச. பாலகிருஷ்ணசர்மா, ஐ. பாலசுப்பிரமணியம். இசைப்பிரிவு அதிபர்: இசைமணி வ. செல்லத்துரை, நிர்வாக உறுப்பினர்கள்: ச. கந்திரமூர்த்தி சர்மா, க. சுப்பையா. நாடகப்பிரிவு அதிபர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை நிர்வாக உறுப்பினர்கள்: ச. சுப்ரமண்யசர்மா, சி. சிவலிங்கம், கிராமிய நடனப் பிரிவு அதிபர்: வ. வயிரவப்பிள்ளை. உதவி: த. இராசா. கணக்குப் பரிசோதகர்: திரு. வ. சின்னத்துரை.

குற்றச்சாட்டிற்கு மறுப்பு

கொழும்பு, புதன்

இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தலைவர் திரு. என். ஈ. வீரசூரியா, கார்ப்பரேஷன் சம்பந்தமாக அதன் உபதலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி சாட்டியுள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்து மந்திரி மைத்திரிபால சேனநாயகாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

வானொலிநிகழ்ச்சிகள்

வியாழன் 20-2-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை,

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கிளாரினட்—நிலையவித்துவான், 7-00 பேச்சு—'நாடும் நாமும்', 7-15 நேயர் விருப்பம். 7-45 நாடகம்—'காலங்களில் அவள் வசந்தம்—மணிவண்ணன் எழுதியது, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம்—கே. கே. அச்சுதன், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 மஸ்தான்சாகிப் பாடல்கள்.

பகல் 12-00 தொழிலார்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு, 2-40 ஜய பேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 சமுதாய நீதி—பி. கருணாகரன்—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி, 8-40 குரல் இசை, 9-15 சுபத்த சங்கீதம், 10-00 இசைக்கோவை,

பொன்னையா நினைவு பேச்சுப்போட்டி

குரும்பசிட்டி, புதன்

ஈழகேசரிப் பொன்னையா நினைவுவிழா மார்ச் மாதம் 28 ந் திகதி குரும்பசிட்டி சன்மார்க்கசபையின் ஆதரவில் சபை மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவின் முக்கிய அம்சங்களாகப் பேச்சுப்போட்டி, மகேசுர பூசை, பகிரங்கக் கூட்டம், கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறுமென அறிவிக்கப்படுகிறது.

சென்ற வருடம் ஈழகேசரிப் பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டியின்போது, இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் மேற்பிரிவில் 40மாணவ மாணவிகளும், கீழ்ப் பிரிவில் 35 மாணவமாணவிகளும் பங்கு பற்றினர். மேற்பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் க. பரஞ்சோதியும், கீழ்ப்பிரிவில் புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலய மாணவி செல்வி. செ. சித்திரஜீயாவும் முதலாவதாகத் தெரியப்பட்டு தங்கப் பதக்கங்களைக் கவிகரித்தனர்

பேச்சுப் போட்டி

ஈழகேசரிப் பொன்னையா ஞாபகார்த்தப்பேச்சுப்போட்டி இவ்வருடமும் மார்ச் மாதம் 28 ந் திகதி காலை நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், புத்தகப் பரிசுகள் வழங்கப்படவிருக்கிறது.

பேச்சுப் போட்டி இரு பிரிவாக நடைபெறும். கீழ்ப் பிரிவில் பங்கு பற்றுபவர்கள் 1-4-52 க்குப்பின் பிறந்தவர்களாகவும், மேற்பிரிவில் பங்கு பற்றுபவர்கள் 1-4-46 க்குப் பின் பிறந்தவர்களாகவும் இருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சகாய நிதிச்சங்க நிர்வாகிகள்

[சுழிபுரம், புதன்

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய நிதிச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சுழிபுரம் அரசினர் விக்டோரியாக் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. இ. தம்பையா தலைமையில் நடைபெற்றது. கூட்ட அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் நடைபெற்ற புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவில் தலைவராக திரு. இ. தம்பையாவும், உப தலைவராக திரு. சி. பரமலிங்கமும், காரியதரிசியாக திரு. அ. வீரசிங்கமும், உப காரியதரிசியாக திரு. ச. கயிலாசபிள்ளையும் தனாதிகாரியாக திரு. பொ. ஆறுமுகமும் தெரிவு செய்யப்பட்டனர்.

காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகம்

காரைநகர், புதன்

காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா கழக உப-தலைவர் பண்டிதமணி சு. அருளம்பலவனார் தலைமையில் நடைபெற்றது. பின்னர் நடப்பு வருடத்திற்குரிய உத்தியோகத்தர் பின் வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதமணி அ. அருளம்பலவனார், காரியதரிசி: வித்துவான் மு. சபாரத்தினம், தனாதிகாரி: ஆசிரியர் திரு. க. சிற்றம்பலம். திருவாசகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதியில், பண்டிதமணி சு. அருளம்பலவனாரால், திருவாசகத்துக்கு எழுதப்பட்ட ஆராய்ச்சியுரையைக் கழகச் சார்பில் அச்சிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

வர்த்தககலைமன்றக் கூட்டம்

எருக்கலம்பிட்டி, புதன்

அகில இலங்கை வர்த்தக கலை மன்றத்தின் முயற்சியால், தமிழ்ப் பகுதிகளில் வர்த்தக ஆசிரியர்களை நியமிக்கவும், வர்த்தக ஆசிரிய பயிற்சியில் மாணவர்களை அனுமதிக்கவும் அரசினர் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

விசேட வர்த்தக ஆசிரிய பயிற்சி வகுப்புக்கும், வர்த்தக ஆசிரியர் நியமனத்திற்கும் விண்ணப்பங்களை மன்றத்தின் மூலம் அனுப்பும் நோக்குடன், அகில இலங்கை-வர்த்தக கலை மன்றத்தின் பொதுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை உயர் கலை மன்றத்தில் நடைபெற விருப்பதாக மன்றச்செயலாளர் மா. புவனேந்திரன் அறிவித்துள்ளார்.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"டெயிலிநியூஸ்"தான் பிரத்தியேகமாகச் செய்தியை வெளியிட்டதாக அத்தலையங்கத்தில் கூறியுள்ளது. தூரத்திலே யாழ்ப்பாணத்திலுள்ள 'ஈழநாடு'ம் அச்செய்தியை அன்றே இருபதிப்புகளிலும், வெளியிட்டதென்பதையும் இங்கு "டெயிலிநியூஸ் வருவதற்கு முன்பே யாழ்ப்பாண மக்களுக்கு 'ஈழநாடு' மூலம் இச்செய்தி தெரியும் என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

* * *

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தனைத்தனைப் பொழுதும் மறந்துய்யலோ.

—திருநாவுக்கரசர்.

யாழ்ப்பாணம் மாநகரசபை

1964-ம் ஆண்டு வீதிகளுக்கு கல்லிரப்பி தார்ஊற்றும் வேலைக்கான

கேள்விப்பத்திர அறிவித்தல்

மேற்குறிப்பிட்டவேலைக்கான சீல்வைத்த கேள்விகள் 1964ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ந் திகதி நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம் மாநகரசபைக் கமிஷனரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணம் மாநகரசபை நிலாமத்து பொறியியலாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களின் இரு பிரதிகளிலேயே கேள்விகள் அனுப்பப்படல்வேண்டும். இக்கேள்வியைப் பற்றிய சகல விபரங்களையும் நிபந்தனைகளையும் இவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரூபா 55-00 கட்டி 26-2-64 மாலை 3 மணிவரை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். இப்பணத்தில் ரூ.50-00 தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளர் வேலைப்பொருத்தத்தை ஏற்றபின்னரே திருப்பிக் கொடுக்கப்படும்.

மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபைக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.
மாசி 17, 1964. 1792

அழைப்பு

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி வேலைகளின் தற்கால நிலையைப்பற்றியும் அத்றைத் தொடர்ந்து நடத்தும் முறையையும் வழிவகைகளைப் பற்றியும் ஆலோசனை செய்யும் நோக்கமாக அவ்வாலயத் தொண்டர்களும் மற்றும் சைவ அடியார்களும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 24-2-64 திங்கட்கிழமை 5 மணிக்குக் கூடுவதற்கு நிச்சயித்துள்ளார்கள். திருப்பணிச் சபைத்தலைவரும் மற்றும் சிலரும் விடயங்களை விளக்குவார்கள். அச்சமயம் சைவ அன்பர்கள் சமுகம்தர வேண்டப்படுகிறார்கள்.

இங்ஙனம்
1791 க. வைத்தியநாதன்.

விளம்பரம்

வர்த்தகப் பயிற்சி விண்ணப்பம

அகில இலங்கை வர்த்தக கலைமன்றத்தின் பொதுக்கூட்டம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் உயர் கலைமன்றத்தில் காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

அங்கத்தவர்கள் நிலுவை சந்தாவை செலுத்துவதுடன் கூட்டத்திற்கு சமுகம் தரவும். வர்த்தக ஆசிரியர், வர்த்தக ஆசிரிய பயிற்சி விண்ணப்பங்களை மன்றத்தின் மூலம் அனுப்பவும் தபால் முத்திரை ரூ.15-00 தபால் செலவு60+60 சத முத்திரை கொண்டுவரவும். விண்ணப்பப் படிவம் கூட்டத்தில் வழங்கப்படும்.

மா. புவனேந்திரன்,
செயலாளர்.
நீர்வேலி. 1790

கொடிகாமத்தில் வாலிபர் கைது

கொடிகாமம், புதன்

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த துப்பறியும் பொலிசார் மூவர் நேற்றிரவு 10 மணியளவில் கொடிகாமம் சந்தைக்கருகேயுள்ள கடையில் சாமான் வாங்க வந்த ஒரு முஸ்லிம் வாலிபரை சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று சந்தேகத்தின் மீது கைதுசெய்தனர்.

கைதுசெய்த பின்பும் சுமார் இரண்டு மணித்தியாலம் கொடிகாமம் சந்தைக்கருகே துப்பறியும் பொலிசார் தாங்கள் வந்த காரை நிறுத்தி வைத்து பலருடன் இதுசம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்திக்கொண்டிருந்த பின் அந்த வாலிபனையும் கூட்டிச் சென்றார்கள். துப்பறியும் பொலிசாரைத் தவிர அந்தக் காரில் கார் சாரதியும் வேறு ஒருவரும் காணப்படடார்கள் எனறும அது ஒரு தனிப்பட்ட நபரின காரர் என்றும் தெரிய வருகிறது.

வரி விளம்பரம்

அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ரோட்டில் 284-ம் நம்பர் கடையில் கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1-1-1963 க்கு முன் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை7-3-1964 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
வண்ணார்பண்ணை
11-2-64. 1954

தொய்வு, நீரிழிவு

துணைப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றோர் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநாதர் நகைரையபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,

மரண அறிவித்தல்

குட்டிப்பிள்ளை

யாழ்ப்பாணக்காதாரசேவை கூட்டுறவுச் சங்க அங்கத்தவரும் யாழ். அரசினர் பொது வைத்தியசாலையில் கடமை புரிபவருமாகிய திரு. இ. கந்தையாவின் தாய் குட்டிப்பிள்ளை காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் 19-2-64 பிற்பகல் 2 மணிக்கு உரும்பராய் கிழக்கு இழங்காடு மயானத்தில் நடைபெற்றது. 1978

பிரபல விளையாட்டு வீரர் மரணம்

லண்டன், பெப். 19

முன்னாள் இலங்கை சௌட் அங்கத்தவரும் பிரபல விளையாட்டுக்காரருமான கேர்னல் ரி. வை. றைபிட் சென்ற சனிக்கிழமை இங்கு மரணமானார். இவர் இலங்கையில் தோட்டத் துரையாகவும் இருந்தார்.

பண வருமான . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நின்று கப்பம் பெற்று வருகிறார்களென்றும், பொலிசாரின் அடிக்கும், உதைக்கும் பயந்த நிரந்தரவாசிகள் பணம் கொடுத்து தப்பித்துக் கொள்கிறார்களென்றும், கைது செய்யப்பட்ட பல சந்தேக நபர்களை இந்திய ஹைகமிஷன் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால், விடுதலை செய்யப்படுகிறார்களென்றும், இவர்களின் முக்கிய நோக்கம், கார்ச்சாரதிகளின் உதவியுடன் பணம் சேர்ப்பதேயன்றி, சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களை கைது செய்வதல்லவென்றும், இது சம்பந்தமாக உயர்தர அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதுவரை காலமும் கைது செய்யப்படும் சந்தேக நபரிடமே கப்பம் பெற்று வந்தவர்கள் தற்பொழுது, அவர்களை வேலைக்கமர்த்தியிருக்கும் முதலாளியைப் பயமுறுத்தி கப்பம் பெறுகிறார்களென்றும், யாழ்ப்பாணம் போசனசாலை ஒன்றில் வேலைசெய்துவந்த ஒரு வாலிபரைபிடித்தார்களென்றும், அந்த வாலிபர் தனது தாயகம் இலங்கைதானென்று திரும்பத் திரும்பக் கூறியதால் ஆறு மாதகாலம், முகாமில் வைத்திருந்து விட்டு கடைசியில் அதே கடையில் கொண்டு வந்து விட்டார்களென்றும், இதன் காரணமாகவே, தற்போது கைது செய்யப்படுபவர்களிடம் கப்பம் வாங்காமல், அவரை வேலைக்கு வைத்திருந்த முதலாளியிடம் கப்பம் வாங்குகிறார்களென்றும் கூறப்படுகிறது.

பண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாலே நடத்தப்படும் பாலபண்டித, பண்டித வகுப்புக்கள், வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 22-2-64 சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு ஆரம்பமாகும். ஆற்றலும் அநுபவமுமுள்ள ஆசிரியர்கள் படிப்பிப்பார்கள். வகுப்புக்களிற சேரவிரும்புவோர் சேர்ந்துகொள்ளலாம்.

ஆர். எஸ். பாமர்
காரியதரிசி,
யா. ஆ. தி. பா. சங்கம்.

கல்விக்கந்தோர்,
யாழ்ப்பாணம்.
18—2—64 1789

பக்
கில்லர்
மந்திர சக்தி போன்று
மூட்டைகளை
கொன்று விடுகிறது.

கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:
ஜாயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு. BK1

பாதுகாப்புசபை ஆதரவு இந்தியாவுக்கே இருந்ததாம்

சக்ளா அறிவிப்பு

புதுடில்லி, பெப். 19

காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது இறுதியானது-மாற்ற முடியாதது என இலாகா இல்லாத மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி பார்லிமெண்டில் கூறினார்.

பாதுகாப்பு சபையில் பொதுவாக இந்தியாவுக்கே அனுதாபம் இருந்ததாயும், தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு எந்த நாட்டையும் தூண்டுவதில் பாகிஸ்தான் வெற்றியடையவில்லை என்றும் பம்பாயில் பேசிய திரு சக்ளா அறிவித்தார்.

"பிரிட்டனும், அமெரிக்காவும் பாகிஸ்தானை ஆதரித்த போதிலும், பொதுவாகச் சபையின் அனுதாபம் பாரதத்தின் பக்கமே இருந்தது. அமெரிக்காவும் பிரிட்டனும் நடுநிலைமை வகிக்கும் என்றே நினைத்தேன்" என்றும் சக்ளா கூறினார். தக்ககாரணம் இன்றியே இந்தியாவை பாகிஸ்தான் விவாதத்திற்கு இழுத்து வந்தது என்பதை பாதுகர்ப்புசபை உணர்ந்து விட்டது என்றும் அவர் கூறினார்.

"நாவலர் பாடசாலையை இடம் மாற்றக்கூடாது"

பிரதமரிடம் சைவபரிபாலன சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலுள்ள நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை அங்கிருந்து அகற்றி ஓட்டுமடத்துக்குக் கொண்டு செல்வதற்கு செய்யப்படும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஒரு தீர்மானத்தின்மூலம் பிரதம மந்திரியைக் கேட்டுள்ளது.

நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை வண்ணார்பண்ணையில் முடிவிட்டு ஓட்டுமடத்துக்குக் கொண்டுசெல்லும் முயற்சியை ஆட்சேபித்து பிரதமர், கல்வி மந்திரி, வித்தியாதிபதி, மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து நடவடிக்கை யெடுப்பதென சைவபரிபாலன சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டம் இம்மாதம் 16 ந்திகதி நடைபெற்றது.

மகாசபையின் தீர்மானப் பிரதி பிரதமர் திருமதி சிறிமா பண்டார நாயக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தொண்ணூற்றைந்து சதவிகிதத்துக்கு மதிகமான சைவப்பிள்ளைகள் வாழும் வண்ணார்பண்ணையிலேயே இப்பாடசாலை இருக்கவேண்டியதுடன் சைவத்துக்கு மறுமலர்ச்சியேற்படுத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நினைவாகவும் இப்பாடசாலை இப்பொழுதுள்ள இடத்தில் அமைந்துள்ளதென்றும் பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையை இடம் மாற்ற வேண்டுமென்ற நல்லூர் எம்.பி. யின் யோசனையை நிராகரித்துவிடுமாறும் பிரதமரை சைவபரிபாலன சபை கேட்டுள்ளது.

3-வது மகத்தான வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (ஹட்டன்)

நிந்தாவூர் சினிமா (நிந்தாவூர்)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி நி. எஸ். சரோஜா, சம்பந்தம் மற்றும் பலர் நடிக்கும்

மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

இசை: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். — அஞ்சலிதேவி நடித்த சர்வாதிகாரி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

தாலிக்கொடி வழிப்பறி!

19 வயது இளைஞன் கைது

யாழ்ப்பாணம், வியாழன்

கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சுமார் 50 வயதுள்ள பெண்ணை 19 வயதுள்ள இளைஞன் ஒருவன் பின்தொடர்ந்து சென்று அந்தப் பெண்ணின் கன்னத்தில் அறைந்து பின்னர் கைகளில் கடித்துவிட்டு அவர் அணிந்திருந்த தாலிக்கொடியையும் சங்கிலியையும் திருடிச் சென்ற துணிகரச் சம்பவமொன்று அண்மையில் நல்லூரில் நிகழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் பொதுமராமத்து இலாகாவைச் சேர்ந்த திரு. சுப்பையாவின் மனைவி திருமதி சரஸ்வதி கடந்த வியாழக்கிழமை இரவு 8-30 மணியளவில் கடைக்குச் சென்று விட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரை பின் தொடர்ந்து சென்ற 19 வயதுள்ள கே. வரதராஜா என்ற இளைஞன் அப்பெண்ணின் கன்னத்தில் அறைந்து தாலிக்கொடியையும் சங்கிலியையும் பறிக்க முயன்றார். அந்த இளைஞனை அவர் பிடித்துக்கொண்டு சத்தமிடவே, இளைஞன் அவரின் கைகளில் கடித்தார். பிடியிலிருந்து விடுபட்டு நகைகளுடன் ஓடிக்கொண்டிருந்த பொழுது பெண்ணின் சத்தத்தைக்கேட்டு ஓடிவந்த பிரேமநாயக்கா என்பவர் அந்த இளைஞனை பிடித்துக்கொண்டார்.

எஸ். எஸ். ஸி. படித்த அந்த இளைஞன் பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார். இப்பொழுது அவர் 'கோர்டுப்' பிணையில் விடப்பட்டுள்ளார். திருடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உதவிபொலிஸ்இன்ஸ்பெக்டரும் பொலிஸ்கான்ஸ்டபிளும்விடுதலை

கார் சாரதியை தாக்கியதாக தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பு

கொடிகாமம், புதன்

வவனியாவிலுள்ள கார் சாரதி வி. நாகராசாவைத் தாக்கிப் படுகாயப்படுத்தியதாக, வவனியா பொலிஸ் நிலையத்தை சேர்ந்தஉதவிபொலிஸ் இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளைபொலிஸ் கான்ஸ்டபிள் எஸ்.சரவணமுத்து ஆகியோர் மீதுகுற்றஞ்சாட்டி தொடரப்பட்டவழக்கு,வவனியா கோர்ட்டில் நீதிபதி திரு. எஸ். என். இராசதுரைமுன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த எதிரிகளாகிய உதவி பொலிஸ் இன்ஸபெக்டரையும், பொலீஸ் கான்ஸ்டபிளையும் நீதிபதி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. சி. எஸ். பார்குமாரகுலசிங்கம் திரு. பத்மநாதனின் உதவியுடனும் திரு. சிற்றம்பலத்தின் அனுசரணையுடனும் ஆஜராகி வழக்காளி தரப்பில், புறக்டர் திரு. சேனாதிராசாவினுதவியுடன், சப் இன்ஸ்பெக்டர் திரு. ரோட்றிக்கோவும், இன்ஸ்பெக்டர் திரு. இஸ்மாலும் வழக்கை நடத்தினார்கள்.

விசேஷமாக நடைபெற்ற இவ் விசாரணையை பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

பண வருமானத்துக்காக கைதுசெய்யும் கொடுமை

கடை முதலாளிகளிடம் கப்பம் வசூல்

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாணத்திலுள்ள நிரந்தர வாசிகளை சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் என்று இரகசியப் பொலிசாரிடம் காட்டிக் கொடுத்து, அதன் மூலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சில கார்ச்சாரதிகள் கப்பம் பெற்று வருவதோடு, இதையே அவர்களின் வருமானமுள்ள தொழிலாகக் கருதி செயலாற்றி வருகிறார்களென்று தெரிய வருகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் இக்கார்ச் சாரதிகளுக்கு காட்டிக் கொடுக்கும் ஏஜண்டுகள் இருக்கிறார்களென்றும், அவர்கள் கொடுக்கும் தகவலின்படி இக்கார்ச் சாரதிகள் பொலிசாரை அழைத்துச் சென்று நிரந்தரவாசிகளைக் கைது செய்து, இடையிலே தரகராக

(5-ம் பக்கம் பார்க்க)

"குழந்தையின் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டிருக்கிறது"

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு நேற்று மாலை நீதிபதி அரசவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது டாக்டர் ஏ. ஜீவநாயகம் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில், கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன் செல்லன் என்பவர் அவரின் மகள் சரசுவதியின் குழந்தையை கொலை செய்ததாகவும், குழந்தையின் பிறப்பை மறைத்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜராகி, கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. ராஜநாயகம் வழக்கை நடத்தினார்.

டாக்டர் ஜீவநாயகம் சாட்சியமளிக்கும் போது கூறியதாவது:

சென்ற மாதம் 5-ம் திகதி காலை 8-30 மணியளவில் குழந்தையை நீதிபதி முன்னிலையில் நிலத்திலிருந்து தோண்டி எடுத்தேன். குழந்தையின் சடலம் ஒரு உமலுக்குள் வைக்கப்பட்டு நீலக்கால்சட்டையால் சுற்றப்பட்டிருந்தது. அது ஒரு பெண் குழந்தை. பிறந்து 48 மணிநேரத்திற்குள் இறந்திருக்க வேண்டும். குழந்தையின் வலது கன்னத்திலும் நாலு இடது கன்னத்திலும் நாலு காயங்கள் காணப்பட்டன. என்னுடைய அபிப்பிராயத்தின்படி குழந்தையை யாரோ நெரித்தபடியால், மூச்சுத்தினறி குழந்தை இறந்திருக்க வேண்டும்.

நீதிபதி கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போது குழந்தை பிறக்கும் போது உயிரோடு பிறந்திருப்பதாகக் டாக்டர் கூறினார்.

டாக்டர் சாட்சியமளித்தபின் நீதிபதி இவ்வழக்கை அடுத்த மாதம் 4-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

மரண அறிவித்தல்

கன்னங் பிரபல புரக்டரும் பிரசித்த நொத்தாரிசுவும் சமாதான நீதவானும் முன்னாள் மயிலணி சைவ வித்தியாசாலை முகாமைக்காரருமாகிய திருவாளர் தி. குமாரசாமி அவர்கள் நேற்று மாலை 5 மணிக்கு காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு கன்னங் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

வேலை வாய்ப்பு

எஸ். எஸ். ஸி. பரீட்சையில் 5 பாடங்களில் விசேஷ சித்தி (Credits) பெற்றவர்களிடமிருந்து கனிஷ்ட லிகிதர்கள் (Junior Clerks) பதவிக்கு இலங்கை வங்கி விண்ணப்பம் கோரியுள்ளது. வயது: 20 - 24. விண்ணப்பதாரர்கள் ஒரே தடவையில் ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்களம், கணிதம் அல்லது தூயகணிதம் ஆகிய பாடங்களுடன் வேறு மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

தகுதியுடையோர் தங்களது விண்ணப்பங்களை இம்மாதம் 18-ந் திகதிக்கு முன்னர் உதவிமனேஜர், இலங்கை வங்கி ஜெனரல் காரியாலயம், கொழும்பு. என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். இதற்கான பத்திரங்கள் உண்டு.

மாநகரசபை சுகாதார அதிபருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

'டாக்டர் சிவஞானசுந்தரம் செய்துள்ள சேவைகள் எமக்கு எல்லோரது நெஞ்சிலும் என்றும் பதிந்து நிற்கும்' என யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதார அதிபர் டாக்டர் சிவஞானசுந்தரத்துக்கு கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கத்தினரால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தின்போது சங்கக் காரியதரிசி திரு. ச. இராசையா பேசுகையில் கூறினார்.

தமக்களிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் டாக்டர் சிவஞானசுந்தரம் கூறியதாவது;

எனக்குப் பல இடங்களில் இருந்து உபசாரம் தந்தார்கள். ஆனால் சிறு விவசாயிகள் நிறைந்த ஒரு சிங்கள கிராமத்தின் தொழிலாளர்கள் தந்த விருந்து என் மனதில் நன்கு பதிந்துவிட்டது. இங்குள்ள தொழிலாளர்களாகிய நீங்கள் தந்த இந்த விருந்து எல்லாவற்றையும் விட மேலாக இருந்தது. ஏழைகள் என்றும் அன்புடையவர்கள். அந்த அன்பு என்றும் அழிக்க முடியாது.

யாழ்ம்பாணம் மாநகரபை அங்கத்தவர் திரு. சி. நாகராசா, திருவாளர்கள் எம். ஜேக்கப், கே. பி. முத்தையா, ஜே. டி. ஜீவானந்தம் ஆகியோரும் பேசினார்கள். திரு. செல்வராசா வரவேற்புப்பா பாடினார்.

வேலணை கி. ச. தேர்தல்

ஊர்காவற்றுறை, புதன்

ஒன்பது வட்டாரங்களைக் கொண்ட வேலணை கிராம சபையின் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கிறது.